## உஸ்பெகிஸ்தான்



# ஞானஸ்நானம் பெறத் தயக்கம்

*இன்று தான் ஞானஸ்நானம் பெற்றதால் வயலெட்டா மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்.*

உஸ்பெகிஸ்தானின் தலை நகரான டஸ்கென்டில் நடைபெற்ற சுவிசேஷக் கூட்டங்களின்போது, பிரசங்கம் செய்தவர் அர்ப்பணிப்பு அழைப்பு கொடுத்த சமயத்தில், தான் இன்னும் ஞானஸ்நானத்திற்கு தயாராகவில்லை என்று வயலெட்டா நினைத்தாள்.

அவளுக்கு போதுமான வேத அறிவு இல்லை. ஆனால் வாழ்க்கை முழுவதையும் தேவனிடம் அர்ப்ப ணிக்குமாறு பிரசங்கியார் கொடுத்த அழைப்பு பெரிதாகத் தெரிந்தது.

'என்னால் முடியாது! அதில் எனக்கு விருப்பமும் இல்லை என்று வயலெடா சொல்லிக்கொண்டாள்.

சில காலமாகத்தான் தம் அம் மாவுடன் சேர்ந்து அட்வென்டிஸ்ட் சபைக்குச் செல்ல ஆரம்பித்திருந் தாள். சிறுகுழு ஒன்றில் இருவரும் சேர்ந்து வேதப்பாடங்களைப் படித்து முடித்திருந்தார்கள்.

அந்தச் சமயத்தில்தான் ரஷ்ய வேதாகமக் கல்லூரி இயங்குகிற அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகத் தின் தலைவர் சாவோவ்ஸ்கி சுவி சேஷக்கூட்டங்கள்நடத்துவதற்காக டஸ்கன்டிற்கு வந்திருந்தார். ஆண் டவருக்கு இருதயத்தை ஒப்புக் கொடுத்து ஞானஸ்நானம் பெற முன்வருமாறு கூட்டத்தினரை அவர் அழைத்தபோது, வயலெடாவின் அம்மாதான் முதன்முதலாக முன் பாகச் சென்றார். பிறகு சபைப் போதகருடைய 14 வயது மகன் முன்பாகச் சென்றான். அதன் பிறகு, மூன்றாவது ஒரு நபர் சென் றார். ஆனால் வயலெடா அசைய வில்லை. 'இந்த முறை ஞானஸ் நானம் பெற வேண்டாம்' என்று

மனதிற்குள் நினைத்தாள்.

அடுத்த நாள் இரவில், பிரசங்கியார் மீண்டும் அந்த அழைப்பைக் கொடுத்தார். சபையைச் சேர்ந்த தோழி ஒருவர் தன்னை ஊக்கப் படுத்தியது வயலெடாவுக்கு ஞாபகம் வந்தது. “வேதப்பாடங்களை முடித்துவிட்டதால், நீ ஞானஸ்நானம் பெறலாம்” என்று சொல்லியிருந்தார். ஆனாலும் தான் ஆயத்தமானதாக அவர் உணரவில்லை. தனக்கு போதுமான அளவுக்கு வேத அறிவு இல்லையென நினைத்தார்.

பிரசங்கியார் அழைத்த சமயத்தில் அவர் நேரடியாக வயலெட்டாவைப் பார்த்தார். இல்லை என்பது போல உறுதியாக தலையசைத்தார்.

கூட்டங்களின் கடைசி நாள் இரவில், பிரசங்கியார் இறுதியாக ஒரு அழைப்பு கொடுத்தார்.

“யார் உங்களை ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவுக்கு ஒப்புக் கொடுக்க விரும்புகிறீர்கள்?” என்று கேட்டார்.

வயலெட்டாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அட்வென்டிஸ்ட் சபை வேதாகம சத்தியத்தை மட்டுமே அறிவிப்பதை உணர்ந்திருந்தார். ஆனாலும் தான் ஆயத்தமானதாக அவர் உணரவில்லை.

முந்தின இரவுகளில் முன் வந்தவர்களை மீண்டும் முன்பாக வரும்படி அழைத்தார். வயலெட்டாவின் அம்மா உட்பட பத்தக்கும் மேற்பட்டோர் முன்பாகச் சென்றார்கள். பிரசங்கியார் அவர்களை வரவேற்றார். ஆனால் அவர் விடுவதாக இல்லை. மீண்டும் ஒருமுறை அழைப்புக் கொடுத்தார்.

“உங்களில் வேறு யாராவது இருக்கலாம். நீங்கள் முன்பாக வர விரும்புகிறீர்களா?” என்று கேட்டார்.

மீண்டும் மீண்டும் அழைத்தார். அவர் அழைத்த ஒவ்வொரு முறையும், நேரடியாக தன்னையே அழைப்பதாக வயலெட்டா உணர்ந்தார்.

‘நான் மேடைக்குச் செல்லலாமா?’ என்று யோசித்தார்.

பதிலுக்கு யோசிப்பதற்குள்ளாக, எழுந்து மேடைக்குச் சென்றுவிட்டார்.

“அவ்வளவுதான். அந்த நபருக்காகத்தான் நாம் காத்துக்கொண்டிருந்தோம்” என்று போதகர் சொன்னார்.

ஆனால் கடைசியாகச் சென்றது வயலெட்டா மட்டுமல்ல; வயலெட்டாவுடன் சேர்ந்து 60 வயது நபர் ஒருவரும் சென்றார். இருவரும் சேர்ந்து வேதப்பாட வகுப்புகளில் கலந்துகொண்டவர்கள்தாம். “எனக்கு பயமாக இருந்தது. ஆனாலும் நீங்கள் எழுந்து முன்பாகச் சென்றதைப் பார்த்ததும் எனக்கும் செல்லுவதற்கான தைரியம் வந்தது” என்று சொன்னார்.

வயலெட்டாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. தன்னுடயை உள்ளான போராட்டமும் இறுதி முடிவும் இன்னொருவரில் தாக்கம் ஏற்படுத்தவிருந்ததை வயலெட்டா யோசித்துப் பார்க்கவில்லை.

ஞானஸ்நானம் பெற்றதால் வயலெட்டா இன்று மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார். காத்திருக்க

வேண்டிய அவசியமில்லை என்பது அவரது கருத்து. ஞானஸ்நானம் பெறுவதற்கு வேதாகமம் முழுவதையும் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. அவர் தன் வாழ்க்கையை முற்றிலுமாக இயேசுவிடம் ஒப்படைத்து, தன் முழு இருதயத்தோடும் அவரை நம்பவேண்டியது மட்டுமே அவசியமாக இருந்தது. இரட்சிக்கப்படுவதற்கு தான் என்ன செய்யவேண்டுமென்று சிறைச்சாலைக்காரன் பவுல் மற்றும் சீலாவிடம் கேட்டபோது, 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட் சிக்கப்படுவீர்கள்' என்று சொன்னார்கள். அப்போஸ்தலர் 16:31.

தன்னுடைய தீர்மானத்தைப் பயன்படுத்தி 60 வயது முதியவர் ஒருவர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு தேவன் உதவியதை எண்ணி வயலெட்டா மிகவும் மகிழ்ச்சியடைகிறார்.

அவரது அந்தத் தீர்மானத்தின் செல்வாக்கு வளர்ந்துகொண்டே இருந்தது. இப்போது 9 வயதான அவரது மகனும் ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறார். "அவன் சரியான பாதையில் வளருவதற்கு விரும்புகிறேன்" என்று சொன்னார்.

இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி, உஸ்பெகிஸ்தானின் டஸ்கென்டில் முதல் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஆரம்பப்பள்ளியை ஆரம்பிப்பதற்குப் பயன்படும். ஜூன் 29ம் தேதி, உதாரத்துவமாக காணிக்கை கொடுக்கத் தீர்மானித்திருப்பதற்கு நன்றி.

## கதைக் குறிப்புகள்

- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- யூரோ ஆசியா டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/esd-2024.
- அடுத்த வாரம் ஆலியாவின் மகள் வயலெட்டாவைப்பற்றி அதிகம் கற்றுக்கொள்ளலாம்.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் "ஐ வில் கோ" என்ற திட்டத்தின் பின்வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, "தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்".
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 6, 'குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வாலிபர்களின் சேர்க்கை, தக்கவைப்பு, மீட்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை அதிகரிக்கவேண்டும்'.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 7, "இளைஞர்கள் ஆண்டவருக்கு முதலிடம் கொடுப்பதற்கும், வேதாகம உலகக் கண்ணோட்டத்தை எடுத்துக்காட்டுவதற்கும் உதவவேண்டும்."